DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : கோமதிநாயகம் | Father/Husband Name : ராஜரத்தினம் |
| Age : 55 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : மினரல் வாட்டர் தொழில் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10 Apr 2026 12:23

(Accused Present)

**<u>முதல் விசாரணை</u>** :–

1. நான் சாத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் மினரல் வாட்டர் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1வது எதிரி சங்கர் எனக்கு தாய்மாமா ஆவார். 2வது எதிரி விஜயா எனக்கு அத்தை ஆவார். என்னுடைய மனைவி ஆசிரியராக வேலை செய்து வருகிறார்.

2. என்னுடைய பெரியம்மா எங்களுடைய பூர்வீக சொத்தை 1வது எதிரி சங்கருக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்திருந்தார். அதை நான் பணம் கொடுத்து மீட்டினேன். எனக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தில் பாதையை குறிப்பிடவில்லை. முத்துக்குமாரும் அவருடைய அப்பாவும் என்னுடைய வீட்டிற்கு வந்து பாதை விடக்கேட்டு பிரச்சனை செய்தார்கள். நான் அவர்களுக்கு பாதை இல்லை என்றும், அவர் 1வது எதிரி சங்கரிடமிருந்து சொத்தை வாங்கியுள்ளதால், தாய் பத்திரம் அவரிடம் இருப்பதால் அதில் பாதை இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ளுமாறும் கூறினேன்.

3. முத்துக்குமாரும் அவருடைய அப்பாவும் மதுபோதையில் இருந்ததால் நான் முத்துக்குமாரின் தாயாரான சுலோச்சனாவிடம் அவருடைய வீட்டிற்கு சென்று அந்த விரத்தை கூறிவிட்டு அந்த தெருவிலிருந்து வெளியே வரும்போது மதியம் சுமார் 12.30 மணியளவில் 1வது எதிரி சங்கர் ஒரு நீளமான இரும்பு கம்பியை வைத்து என்னுடைய தலை, முதுகு, தோள்பட்டை, இடுப்பு பகுதி ஆகிய இடங்களில் அடித்தார். அதில் என்னுடைய நெற்றியில் இரத்தக்காயம் ஏற்பட்டது. 2வது எதிரி விஜயா மற்றொரு கம்பியை கொண்டு வந்து என்னை அடித்தார். எதிரிகள் இருவரும் கொண்டு வந்த கம்பி கான்கிரீட் போடக்கூடிய துண்டு கம்பி ஆகும். அந்த சம்பவம் 2022 ம் ஆண்டு நடைபெற்றது, தேதி மாதம் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அதை நான் என்னுடைய வீட்டில் குறித்து வைத்துள்ளேன்.

4. வழக்கு சம்பவம் நடைபெற்றது சனிக்கிழமை என்பதால் என்னுடைய மனைவி வீட்டில் இருந்தார். சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகேயிருந்தவர்கள் என்னுடைய மனைவியிடம் சம்பவம் பற்றி கூறவும், என்னுடைய மனைவி சம்பவ இடத்திற்கு வந்தார், அவரையும் எதிரிகள் சத்தம்போட்டு அசிங்க அசிங்கமாக பேசினார்கள். எதிரிகள் எங்களை பார்த்து புண்ட மகனே என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசினார்கள்.

5. என்னுடைய மனைவி என்னை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றுவிட்டு அங்கிருந்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். எனக்கு இரத்தக்காயம் இருந்ததால் முதலில் மருத்துவமனைக்கு செல்லுமாறு போலீசார் கூறினார்கள். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். எனக்கு ஊமைக்காயம் ஏற்பட்டு வலி இருந்ததால் நான் ஒருவாரம் சிகிச்சையிலிருந்தேன். எனக்கு குளுக்கோஸ் ஏற்றினார்கள். நான் சாத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது போலீசார் என்னை விசாரிக்க வந்தார்கள்.

நான் அவர்களிடம் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு தான் நான் மருத்துவமனையில் வைத்து போலீசாரிடம் கொடுத்ததாகும். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

6. என்னிடம் காட்டப்படும் பி.ஆர். எண்.255/2022 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு கம்பிகளை விட தடிமனான, சுமார் ஒரு இன்ச் தடிமன் கொண்ட கம்பியை கொண்டு எதிரிகள் என்னை அடித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

7. ஒன்றாவது எதிரி சங்கர் என்னுடைய அம்மாவின் தம்பி ஆவார் என்னுடைய மனைவி சிவகங்கையில் ஆசிரியராக வேலை செய்தார். சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் ஊருக்கு வருவார். என்னுடைய மனைவி சிவகங்கையில் வேலை செய்து வந்தபோது நான் அங்கே தண்ணீர் கேன் வியாபாரம் செய்தேன் என்றால் சரிதான், நான் சிவகங்கை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில் அந்த தொழிலை செய்தேன். என்னுடைய தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதால் நான் சாத்தூருக்கு வந்து விட்டேன் என்றால் இல்லை. நான் இதற்கு முன்பு தீப்பெட்டி அலுவலகம் நடத்தினேனா என்றால் நடத்தினேன். அதை தற்போது நான் வாடகைக்கு விட்டுள்ளேன். நான் தீப்பெட்டி அலுவலகம் நடத்தும்போது எனக்கு இழப்பு ஏற்பட்டதால் தான் அதை வாடகைக்கு விட்டு விட்டேன் என்றால் நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாலும், அரசியல் கட்சியில் இருப்பதாலும் பல இடங்களுக்கு செல்ல வேண்டியிருக்கும் என்று வாடகைக்கு விட்டுள்ளேன்.

8. பிள்ளையார் கோவில் தெருவிற்கு எந்த பக்கம் என்னுடைய வீடு இருக்கிறது என்றால் இரண்டு பக்கமும் இருக்கிறது. சுலோச்சனா வீடு என்னுடைய வீடு இருக்கின்ற தெருவில் இருக்கிறதா என்றால் என்னுடைய வீட்டிற்கு பின்பக்கம் இருக்கிறது. நான் அடைத்த பாதை வழியாகத்தான் நான் அந்த இடத்தை விலக்கி வாங்குவதற்கு முன் முன்பு அங்கிருந்த நபர்கள் பாதையாக பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரிதான். எதிரி சங்கர் நான் அடைத்த பாதை தவிர வேறு வழியாக அவருடைய வீட்டிற்கு சென்று கொள்ளலாம் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் சுலோச்சனா வீட்டு முன்பு வைத்து நடைபெற்றதா என்றால் சுலோச்சனா வீட்டிலிருந்து சுமார் 10 அடி தூரத்தில் நடைபெற்றது. வழக்கு சம்பவம் சுமார் அரை மணி நேரம் நடைபெற்று இருக்குமா என்றால் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றிருக்கும். ஆகையால் பக்கத்து வீட்டில் குடியிருக்கும் நபர்களுக்கும் இந்த பிரச்சனை தெரியும் என்றால் சரிதான்.

9. வழக்கு சம்பவத்தில் எனக்கு வீக்க காயம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. வழக்கு சம்பவத்தில் ஏற்பட்டதாக கூறும் காயத்திற்கு எனக்கு தையல் போட்டார்களா என்றால் அரசு மருத்துவமனையில் வைத்து தையல் போடவில்லை, அதற்கு பிறகு தனியார் மருத்துவமனையில் தையல் போட்டேன். வழக்கு சம்பவம் நடைபெற்ற பிறகு நான் மயக்கமாகிவிட்டேனா என்றால் கிரக்கமாக இருந்தது. எதிரிகள் என்னை சுமார் 30 லிருந்து 40 முறை அடித்தார்கள். என்னை காவல் நிலையத்திற்கு என்னுடைய மனைவி அழைத்து சென்றார். என்னுடைய மனைவிக்கு தெருவில் உள்ள நபர்கள் தகவல் கூறினார்கள்.

10. நான் காவல் நிலையத்திற்கு வரும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் எனக்கு காயம் இருப்பதால் என்னை முதலில் மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறிவிட்டார்கள் அதனால் புகார் கொடுக்கவில்லை. என்னை மருத்துவமனைக்கு என்னுடைய மனைவி தான் அழைத்து சென்றார். வழக்கு சம்பவத்தை பற்றி மருத்துவரிடம் யார் கூறினார் என்றால் என்னால் இரண்டு மூன்று வார்த்தைகள் தான் பேச முடிந்தது, மற்ற விபரங்களை என்னுடைய மனைவிதான் கூறினார். நான் மருத்துவரிடம் என்னை

ஒரு நபர் தான் அடித்தார் என்று கூறினேனா என்றால் இல்லை.நான் மருத்துவரிடம் என்னுடைய தலை, தோள்பட்டை முதுகு ஆகிய இடங்களில் காயம் இருந்ததை காண்பித்தேனா என்றால் காண்பித்தேன்.

11. என்னுடைய தலையில் இருந்த ரத்த காயத்தையும் நான் மருத்துவரிடம் காண்பித்தேன் என்றால் சரிதான், ஆனால் மருத்துவர் அதை ஒன்றுமில்லை என்று கூறிவிட்டார், அதிலிருந்து இரண்டு மாதம் கழித்து அந்த காயத்திற்கு நான் தனியார் மருத்துவமனையில் தையல் போட்டு சிகிச்சை பெற்றேன். நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விபரத்தை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் அதற்கு முன்பாகவே போலீசார் என்னை விசாரித்து விட்டார்கள்.

12. இந்த வழக்கு சம்பவம் நடைபெற்றதாக கூறும் தேதியில் ஒன்றாவது எதிரி சங்கர் கொடுத்த புகாரின் அடிப்படையில் என் மீது ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்ததை வாபஸ் பெற கேட்டு எதிரிகள் உதவி ஆய்வாளர் கோமா சங்கர் என்பவர் மூலம் என்னிடமும் என்னுடைய மனைவி மற்றும் மகளிடமும் மிரட்டினார்கள். ஆனால் நான் வழக்கை வாபஸ் பெற முடியாது என்று கூறிவிட்டதா என் மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்துள்ளார். என்னை வாபஸ் வாங்க கேட்டு எதிரிகள் மிரட்டியதாக நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி எங்கள் மீது கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண் 314/2022 பதிவு செய்யப்பட்டது என்றால் வழக்கு எண் எனக்கு ஞாபகம் இல்லை, ஆனால் அந்த வழக்கிற்காக நாங்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகி உள்ளோம்.

13. நான் மருத்துவமனையில் வைத்து கொடுத்த புகாரில் என்னுடைய மனைவியும் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். எதிரிகள் என்னை கம்பியை வைத்து தாக்கியதாகவும், என்னையும் என்னுடைய மனைவியையும் அசிங்கமாக பேசியதாகவும் நான் வழக்குக்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனைவி என்னை விலகி விடும்போது நான் கீழே விழுந்ததில் தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் எதிரிகளை தாக்கிவிட்டு அவர்கள் கொடுத்த புகாரில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் மனு சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கொடுக்கப்படவில்லை என்றாலும், அது வழக்குக்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

10 Apr 2026 13:01

Judicial Magistrate 2, Sattur.